செய்தி வெளியீடு எண். 03-2016 நாள்: 03.01.2017

# விழுப்புரம் மாவட்டம் 2016-17ம் ஆண்டிற்கான கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேர்வுப் போட்டிகள் 06.01.2017 மற்றும் 07.01.2017 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

2016-17ம் ஆண்டிற்கான கேலோ இந்தியா (Khelo India) திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேர்வுப் போட்டிகளை 14 மற்றும் 17 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட அளவிலான தடகளம், நீச்சல், கையுந்து பந்து, குத்துச்சண்டை, ஜுடோ, டேக்வோண்டோ, இறகுப்பந்து, மேசைப்பந்து, கபாடி மற்றும் பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுகளில் (Competitions) 06.01.2017 அன்றும், சைக்கிளிங், கூடைப்பந்து, மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக்ஸ், கோ-கோ, உஷு, கைப்பந்து, ஹாக்கி, கால்பந்து, வில்வித்தை மற்றும் ஜுடோ ஆகியவற்றில் தேர்வுப் போட்டிகளை (Selection Trials) 07.01.2017 அன்றும் நடத்தப்பட உள்ளது.

தடகளம், டேக்வோண்டோ, கபாடி, வாலிபால், இறகுப்பந்து, குத்துச்சண்டை, மேசைப்பந்து, பளுதூக்குதல், நீச்சல், டென்னிஸ் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் 06.01.2017 அன்று காலை 08.00 மணி முதல் விழுப்புரம் மாவட்ட விளையாட்டு அரங்கிலும், சைக்கிளிங், கூடைப்பந்து, மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக்ஸ், கோ-கோ, உஷு, கைப்பந்து, ஹாக்கி, கால்பந்து, வில்வித்தை, ஜுடோ ஆகிய விளையாட்டுத் தேர்வுப் போட்டிகள் 07.01.2017 அன்று காலை 08.00 மணி முதல் விழுப்புரம் மாவட்ட விளையாட்டு அரங்கிலும் நடைபெறும்.

இப்போட்டிகளுக்கான தகுதிகள்: 31.12.2016 அன்று 14 வயதுக்குட்பட்டோர் (01.01.2003 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும்). 31.12.2016 அன்று 17 வயதுக்குட்பட்டோர் (01.01.2000 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும்). மேலும், மாவட்ட அளவிலான போட்டியில் பங்கு கொள்ள உள்ள வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் மேலாளர்கள் ஆகியோருக்கு உணவு மற்றும் பயணப்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்பட உள்ளதால், சாதாரண பேருந்துக் கட்டணம் வழங்கிட, பேருந்துச் சீட்டினை அலுவலகத்தில் சமர்ப்பித்திட வேண்டும் என்றும், மாவட்ட அளவிலான போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறும் அணி வீரர்கள்/ வீராங்கனைகளுக்கு முதல் பரிசு ரூ.350/-, இரண்டாம் பரிசு ரூ.250/- மற்றும் மூன்றாம் பரிசு ரூ.150/- என பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேற்கண்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள தகுதியுள்ள நபர்கள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக தொலைபேசி எண். 04146-243358 மற்றும் கைப்பேசி எண். 7401703485 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.